பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**07 01 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் 634 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில், **Rabi** பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மலையாள நாளிதழான **Kerala Kaumudi,** மக்கள் தொடர்பில் முக்கியப் பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்காக, மதினா-வில் சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. சந்திர சேகர் குமார் தெரிவித்துள்ளார்.

4. உத்தரப்பிரதேசத்தை செமிகண்டக்டர் உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

5. பங்களாதேஷ் பொதுத் தேர்தலை பார்வையிட பார்வையாளர்களை அனுப்புவதில்லை என்று ஐ.நா. முடிவு செய்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் கடந்த **2**-ந் தேதி நிலவரப்படி, **634** லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில், **Rabi** பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த பரப்பளவு, கடந்த ஆண்டைவிட **16** லட்சம் ஹெக்டர் அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

பயிர்கள் நன்றாக வளர்ந்து வருவதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், **312** லட்சம் ஹெக்டர் பரப்பில் கோதுமையும், **42** லட்சம் ஹெக்டரில் நெல்லும், **140** லட்சம் ஹெக்டேரில், பருப்பு வகைகளும் நடவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுதான்யங்கள் மற்றும் பயறு வகைகள் **55** லட்சம் ஹெக்டேருக்கு அதிகமான பரப்பிலும், எண்ணெய்வித்துக்கள், **86** லட்சம் ஹெக்டேர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக, வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

மலையாள நாளிதழான **Kerala Kaumudi,** மக்கள் தொடர்பில் முக்கியப் பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இந்த நாளிதழின் கோட்டயம் பதிப்பு தொடங்கப்பட்டதன் **25**வது ஆண்டு விழாவில் பேசிய அவர், முன்னணி மலையாள நாளிதழான கேரள கௌமுடி, அதன் நம்பகத்தன்மையில் எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி இதழியல் நெறிமுறைகளை பேணிக் காத்து வருவதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பத்திரிகையாளர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே டாக்டர் எல். முருகன் கோட்டயத்தில் உள்ள இந்திய மக்கள் தொடர்பியல் கல்வி நிறுவனத்தைப் பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

<<<<>>>>

இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்காக, மதினா-வில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகளை, மத்திய சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. சந்திர சேகர் குமார் ஆய்வு செய்துள்ளார்.

இந்தாண்டு புனிதப் பயணம் மேற்கொள்வோருக்கு, மதினாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தங்குமிடம், மருத்துவ உதவி மற்றும் யாத்திரையை பத்திரமாக நிறைவு செய்வதற்கான வசதிகளையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்கு, வெளிப்படையான, மேம்பட்ட மற்றும் டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஹஜ் சுவிதா செயலியின் சிறப்பு அம்சங்களையும் அவர் பாராட்டினார்.

சவுதி அரசு அதிகாரிகளுடன் இணைந்து, இந்தப் பணிகளை தொடர்ந்து கண்காணிக்குமாறும் திரு. சந்திர சேகர் குமார், ஜெட்டாவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>

நாட்டிலுள்ள அருங்காட்சியகங்கள், மற்றும் நினைவுச் சின்னங்களை, சுற்றுலாப் பயணிகள், வெளிப்படையான டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் பல்வேறு செயலிகள் வாயிலாக பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதாக, மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மத்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள **170**-க்கும் அதிகமான சுற்றுலாத் தலங்களில், டிக்கெட் நடைமுறை ஒருங்கிணைக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சுற்றுலாப் பயணிகள் இந்த இடங்களை, டிஜிட்டல் பொது சேவைகள் வாயிலாக, சிரமமின்றி, எளிதில் பார்வையிடலாம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

டிஜிட்டல் முறையில் டிக்கெட் முன்பதிவு செய்யும், இந்தியர்களுக்கு தலா **5** ரூபாயும், வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஐம்பது ரூபாய் தள்ளுபடி வழங்கப்படுவதையும், கலாச்சார அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் புத்தொழில் ஊக்குவிப்பு தளமான **Wave X**, ஊடகம், பொழுதுபோக்கு, ஒலிபரப்பு மற்றும் தொலைத்தொடர்பு சார்ந்த தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக, தில்லி ஐ.ஐ.டி.-யின், புதுமைக் கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மாற்றத்திற்கான அறக்கட்டளையுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு.சஞ்சய் ஜாஜூ, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்நுட்பம் குறித்த புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு உந்து சக்தியாக, **Wave-X** திகழ்வதாக கூறினார்.

ஏற்கனவே உள்ள தொழில்நுட்பத்தின் அடிப்படையிலேயே புதிய செயலிகளை உருவாக்கும், கண்டுபிடிப்பாளர்களின் பணியை இந்த தளம் விரைவுபடுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**Wave-X** நிகழ்ச்சிகளை விரிவுபடுத்துவதற்கான ஒத்துழைப்பை, தில்லி ஐ.ஐ-டி.-யின் அறக்கட்டளை உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. சஞ்சய் ஜாஜூ தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தை செமிகண்டக்டர் உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

லக்னோவில் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இத்துறையில் மூவாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுமுகளை ஈர்க்க ஏதுவாக ஊக்கத்தொகை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில நிதியமைச்சர் திரு. சுரேஷ்குமார் கண்ணா, வட்டி தள்ளுபடி, பணியாளர்களுக்கான செலவுகளை திருப்பி அளித்தல், மாநில சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து 10 ஆண்டு காலத்திற்கு விலக்களித்தல் உள்ளிட்ட சலுகைகளை வழங்க அனுமதி அளிக்கப்பட்டதாக கூறினார்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய் வரையிலான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திருப்பி அளிக்கப்படுவதோடு மின்சார கட்டணத்தில் 10 ஆண்டுகளுக்கு யூனிட்டுக்கு 2 ரூபாய் குறைத்து வசூலிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

குரு தேக் பகதூரின் வாழ்க்கை, தியாகம் மற்றும் நற்பண்புகள், அனைவருக்கும் பொதுவானது என்று, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

குரு தேக் பகதூரின் 350-வது நினைவு தினத்தையொட்டி, தில்லி சட்டப் பேரவையில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் பேசிய அவர், தேக் பகதூரின் உழைப்பு, குறிப்பிட்ட ஒரு மதத்திற்கோ, அல்லது காலகட்டத்திற்கு மட்டும் பொருந்தக் கூடியது அல்ல என்றார்.

முன்னதாக, தில்லியில், நீதிமன்றக் கட்டணங்களைக் குறைக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவை, தில்லி அமைச்சர் திரு. பர்வேஷ் சாஹிப் சிங் பேரவையில் அறிமுகப்படுத்தினார்.

<<<<>>>>

தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளில் சேருவதற்கு, விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம், வரும் 13-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த கல்வி நிறுவனத்தில், மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் பலன், 2026-27ஆம் கல்வியாண்டில், வடிவமைப்பு, மேலாண்மை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில், கால அவகாசம் நீட்டிக்கப்பட்டிருப்பாக, மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

14-ந் தேதி முதல் 16-ந் தேதிக்குள் விண்ணப்பிப்போர், தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நுழைவுத் தேர்வு, நாட்டிலுள்ள **102** நகரங்களில், அடுத்த மாதம் **8-**ந் தேதி நடத்தப்படும் என்றும் ஜவுளி அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் மதுரை மண்டலத்தில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து **77** ஆயிரத்து **603** இ-பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக மண்டல பாஸ்போர்ட் அலுவலர் திரு. வசந்தன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மண்டலத்தில் பாஸ்போர்ட் கோரி கடந்த ஆண்டு **2** லட்சத்து **97** ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் வரப்பெற்றதாக கூறினார்.

மேலும் நடமாடும் பாஸ்போர்ட் சேவை மூலம் தொள்ளாயித்துக்கும் அதிகமானோர் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண பாஸ்போர்ட் கோரி விண்ணப்பித்த **2** முதல் **11** நாட்களுக்குள்ளாகவும், தட்கல் பாஸ்போர்ட் விண்ணப்பித்த ஓரிரு நாட்களில் வழங்கப்படுவதாகவும் திரு. வசந்தன் தெரிவித்தார்.

<<<<>>>>

பங்களாதேஷ் பொதுத் தேர்தலை பார்வையிட பார்வையாளர்களை அனுப்புவதில்லை என்று ஐ.நா. முடிவு செய்துள்ளது.

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த ஐ.நா. செய்தித்தொடர்பாளர் **Stephane Dujarric** அடுத்த மாதம் **12**ஆம் தேதி நடைபெற உள்ள பங்களாதேஷ் தேர்தலுக்கு, ஐ.நா. பொதுச்சபையும், பாதுகாப்பு கவுன்சிலும் ஒப்புதல் அளித்தால் மட்டுமே பார்வையாளர்களை அனுப்ப முடியும் என்றார்.

எனினும் டாக்காவில் உள்ள ஐ.நா. அலுவலகம், பங்களாதேஷ் அரசுக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே வெளிநாட்டுப் பார்வையாளர்கள் நீண்ட காலம் தங்க அனுமதிப்பதென்ற பங்களாதேஷ் தேர்தல் ஆணையத்தின் திட்டத்திற்கு அந்நாட்டின் பல்வேறு அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

<<<<>>>>

வெனிசுலா அதிபர் திரு. நிக்கோலஸ் மதுரோவை சிறைபிடிப்பதற்காக அமெரிக்கப் படைகள் நடத்திய ராணுவ தாக்குதலில் உயரிழந்தோர் எண்ணிக்கை 56ஆக அதிகரித்துள்ளது.

பாதுகாப்புப் படை வீரர்கள் மட்டும் 24 பேர் உயிரிழந்திருப்பதாக வெனிசுலா ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச நெறிமுறைகளுக்கு முரணானது என்று கூறியுள்ள வெனசுலா அட்டர்னி ஜெனரல் Tarek William, இதுகுறித்து விசாரணை நடத்த இருப்பதாக கூறியுள்ளார்.

இதேபோன்று வெனிசுலாவில் பணியாற்றிய கியூபா ராணுவம் மற்றும் காவல்துறை அதிகாரிகள் 32 பேரும் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டிகள் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்கும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

அகில இந்திய கால்பந்து சம்மேளன நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியபின் இதனைத் தெரிவித்துள்ள அவர்,

வழக்கமாக செப்டம்பர் மாதத்தில் தொடங்கும் இப்போட்டிகள் 6 மாதம் தாமதமாக அடுத்த மாதம் தொடங்க இருப்பதாக குறிப்பிட்டார்.

இப்போட்டியில் மோகன் பஹான், ஈஸ்ட் பெங்கால் உள்ளிட்ட 14 அணிகள் பங்கேற்க இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**<<<<The End>>>>**